# ஏசாயா 53

## தேவனுடைய பணியாளரின் பாடுகளைப் பற்றிய பாடல்

### 1-4 இயேசுவின் ஊழியம்

1. எங்கள் மூலமாய்க் கேள்விப் பட்டதை விசுவாசித்தவன் யார்? ♦கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?

2. இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் ♦அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை, அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது.

3. அவர் அசட்டைபண்ணப் பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்.

4. மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் ♦தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.





### 5-8 இயேசுவின் மரணம்

5. நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

6. நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; ♦கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்.

7. அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப் படும்படி கொண்டுபோகப் படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

8. இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.

Cell :89030 11350 Email : selwynde@gmail. com

## 9 - இயேசுவின் அடக்கம்

9. துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.

## 10-12 உயிர்த்தெழுதலும் உயர்த்தப்படுதலும்

10. ♦கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி,அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார், ♦கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.

11.அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு, திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்.

12. அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக் காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.

தேவனுடைய ஊழியக்காரராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகளை விளக்குகிறது.

பாடுபடும் மேசியாவைப்
பற்றிய பாடல்

**அடிக்கடி வரும் வார்த்தைகள்**

அவர்: $3^2$, $4^2$, $5^3$, 6, $7^3$, $8^2$, $9^3$, $10^2$, 11, $12^2$ -21

அவரை : $2^2$, $3^2$, $10^2$ - 6

அவருக்கு : $2^2$, 12 - 3

அவருடைய : 5, 8, 9, 10 - 4

கர்த்தர் : 1, 10 - 2

♦கர்த்தரோ: 6, 10 - 2

பிதாவாகிய தேவனை குறிக்கிறது

அக்கிரமங்கள்: 5, 6, 11, $12^2$ - 5

துன்மார்க்கர் : 9 - 1

மீறுதல் : 5, 8 - 2

ஆத்துமா : 10, 11, 12 - 3

சுமந்து : 4, 11, 12 - 3

பாடுகள் : 3, 4 , 10 - 3

பாடுகளை விளக்கும் வார்த்தைகள் 20

வ 10 - சித்தம் - 2 முறை

வ 12 - அக்கிரமக்காரர் - 2 முறை

வ 6 - ஆடுகளைப்போல

வ 7 - ஆட்டுக்குட்டியைப் போல,
ஆட்டைப்போல

வ 7 - வாயை அவர் திறக்கவில்லை,
வாயைத் திறவாதிருந்தார்.

நாம், நம்முடைய, நமக்கு, நாமெல்லாரும், நம்மெல்லாருடைய தழுவிய வார்த்தைகள் - 10 முறை

தமக்கு, தம்முடைய, தமது, தாமே, தன்னை, தம்மை தழுவிய வார்த்தைகள் - 11 முறை

பழைய ஏற்பாட்டில் பக்கம் 860